“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு”

இதழ் – 01

# நறுமுகை

## புதுவசந்தம் - சிறப்பிதழ்





தமிழ்ச்சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகம்

# தமிழ்ச் சங்கக் கீதம்

புகழ் திகழ் தமிழ்மகள் புவிமீ தாளும்
பொன்னாள் வருக! வருக!
மகிழ்வுறு தமிழ்நில மாந்தர்கள் பண்பு
மலை விளக்காகவே ஒளிர்க
சகலரும் ஒருதாய் தன் பிள்ளை கள்போல்
சமத்துவமாகவே வாழ்க
தனித்துவம் காத்திட எழுக! எங்கள்
தமிழ்க் குல நெறி தளைக்க
தாயக மணிக்கொடி துலங்க
பனித்திடு மலைசூழ் பழநகர் பேரா
தனையுயர் தமிழ்க் கலை மன்றம்
வளர்க! வளர்க! வளர்க!
மானிடம் போற்றிட வளர்க!

வளம்தரு மாவலி நதிமருங் கமைந்தபே
ராதனைப் பல்கலை மன்றில்
விளைந்திடு பயிராய் விளங்கிடு சங்கம்
வீறு கொண்டிலங்கி மிளிர்க
இளம்தமிழ் மாணவர் இன்கலைக்கோட்டம்
இவ்வுலக குளவரை துலங்க
ஈழமணி நாடு வுயர்க! எங்கள்
நாளைய வாழ்வும் உயர்க
நமதிறை அருண்வழி பொலிக
பாளையின் குளிர்தரு மலைசூழ் பேரா
தனைத் தமிழ்ப் பணியகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!
பல்லாண் டுயர்வுடன் வாழ்க!

மெட்டு: “ஜன கன மன “எனும் இந்தியத் தேசிய கீதம்
ஆக்கம்: சக்திதாசன் (அக்கரைச்சக்தி)

# வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கமானது நீண்டகாலப் பாரம்பரியமுடையது. இவ் உயர்கல்வி நிறுவனத்தில் இயலால், இசையால், நாடகத்தால் அது மாணவரை ஒன்றிணைத்து வருகின்றது. மேலும், ஒவ்வொரு வருடமும் மாணவர்களது ஆற்றல், ஆளுமைகளை பல நிகழ்ச்சிகள் மூலமாக வெளிக்கொணர்ந்து பல்கலைக்கழகப் பாரம்பரியத்தினை காத்து வருகின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும். இப் புகழ்பெற்ற தமிழ்ச் சங்கம் வருடந்தோறும் நடாத்தி வருகின்ற புதுவசந்தம் நிகழ்ச்சியானது, பல்கலைக்கழகத்தின் புதிய வரவுகளான மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் களமாகவிருக்கின்றமை அனைவரும் அறிந்ததே.

ஏத்தனையோ பிரச்சினையான காலகட்டங்களில் கூட தன்னுடைய செயற்பாடுகளைத் தளராது மேற்கொண்டு சிறக்கும் இச்சங்கம், பெருந்தொற்றெனும் இக்கட்டான இக்காலகட்டத்திலும் தன் முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுப்பது பாராட்டுக்குரியது. மேடையில் இணைய முடியாச் சூழலிலும், இணையத்தில் இணையும் புதிய கலைஞர்களைப் போற்றுகிறேன். அவர்களுக்கு களம் அமைத்திடும் சங்க உறுப்பினரை வாழ்த்துகிறேன்.

இவ்வருடம் தமிழ்ச்சங்கத்தின் புதிய முயற்சியாக வெளிவரவிருக்கின்ற ‘‘நறுமுகை’’ இணைய இதழை வெளியிட்டு வரவேற்று மகிழ்கிறேன்.

பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்
பெருந்தலைவர்,
தமிழ்ச் சங்கம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்கம் ஒவ்வொரு வருடமும் புதுமுக மாணவர்களை வரவேற்கும் முகமாக நடாத்தும் ”புது வசந்தம்” நிகழ்ச்சிக்கும் அதனையொட்டி வெளியிடப்படும் ”நறுமுகை” சஞ்சிகைக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கொவிட்-19 காரணமாக பல்கலைக்கழக நடைமுறைகள் அனைத்தும் நிகழ்நிலையில் நடைபெறும் தருவாயில் தமிழ்ச்சங்க நிகழ்வுகளையும் முடிந்த வரையில் நிகழ்நிலையில் எடுத்துச் செல்லும் செயற்குழுவினதும் மாணவர்களினதும் முயற்சியினை மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். கொவிட் காலத்தில் பிரசவிக்கும் ‘‘நறுமுகை’’ ஒரு முக்கியமான இதழாகும். இந்த இதழுக்கும் எனது ஆசியினை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன்.

கலாநிதி.எஸ்.கே.நவரட்ணராஜா
பெரும்பொருளாளர்,
தமிழ்ச்சங்கம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் புதுமுக மாணவர்களை வரவேற்பதற்காக வருடம் தோறும் புது வசந்தம் எனும் நிகழ்வினை நடாத்தி வருவது மகிழ்விற்குரிய விடயமாகும். இம்முறை நெருக்கடியான கொவிட் உலகத் தொற்று காலத்திலும் இணைய வழி மூலமாக புது வசந்த நிகழ்வினை நடாத்தி புதுமுக மாணவர்களை வரவேற்பது பெருமைக்குரியது. இந்நிகழ்வில் முதன் முறையாக வெளியிடப்படுகின்ற 'நறுமுகை' இணைய சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஈழத்து கல்விப் பாரம்பரியத்தில் தமிழ்ச் சங்கத்திற்கும் அதன் வெளியீடுகளுக்கும் என்றும் ஒரு தனியிடம் காணப்படுகின்றது. ஈழத்து அறிஞர்கள் பலரின் படைப்புக்களும் கட்டுரைகளும் தமிழ்ச்சங்க சஞ்சிகைகளில் வெளிவந்திருக்கின்றன. அந்தவகையில் 'நறுமுகை' மூலமாக ஈழத்து கல்விப் பாரம்பரியத்தினுள் புதுமுக மாணவர்களையும் ஒன்றிணைத்த பெருமை தமிழ்ச் சங்கத்திற்கேயுரியது. புதுமுக மாணவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தின் வளங்களையும் வாய்ப்புக்களையும் சரியாகப் பயன்படுத்துவதுடன் எதிர்காலத்தில் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து இலக்கிய, கல்வி மற்றும் சமூகப் பணிகளை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன் அவர்களுடைய எல்லா முயற்சிகளும் வெற்றி பெற வாழ்த்துகின்றேன். 'நறுமுகை' என்ற இந்த இணைய சஞ்சிகையை முதன் முதலாக வெளிக்கொண்டுவரும் தமிழ்ச்சங்க செயற்குழுவினருக்கும் மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இந்தப் பயணம் என்றும் இடையறாது தொடரட்டும்.

கலாநிதி.ச.பாஸ்கரன்
கணக்காய்வாளர்
தமிழ்ச்சங்கம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# உள்ளடக்கம்

01. பசுமையான உலகை கட்டியேழுப்புவோம்
02. நெகிழி [பிளாஸ்டிக்] தவிர்த்திடு
03. வசந்தக் காலம்
04. இயற்கை
05. அன்றோர் கனவு
06. உலகமே உணர்ந்திடு
07. தேவை
08. மங்கல தென்றல் அது
09. இயற்கையின் அழகு
10. சூழல் மாற்றத்தில் மனிதன்
11. மெல்லக் கொல்லும் பொலித்தின் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள்
12. எனை நானே கேட்கிறேன்
13. இயற்கை என் காதலன்

**இதழ் வடிவமைப்பு**

மு. புவனேஸ்வரன்
ர. விதுர்ஷன்

**தட்டச்சு பதிப்பு**

ம. பதுஜன்
எ. மேசி விக்டோரியா



# பசுமையான உலகை கட்டியெழுப்புவோம்

கீதா பறளாந்து (கலைப்பீடம்)

21ம் நூற்றாண்டில் சங்கமித்திருக்கும் எம் ஒவ்வொருவருக்கும் நவீனத்துவத்தைப் பற்றியும், தொழிநுட்பம் பற்றியும் நன்றாக தெரிந்திருப்பதோடு அவற்றுடனே எமது வாழ்க்கை பின்னிபிணைந்துள்ளது. மேலும் அவற்றின் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரிப்பதோடு அவை மனிதனின் வாழ்க்கை யிலும் பாரியளவு செல்வாக்கு செலுத்தி யுள்ளன. வேடர் யுகத்தில் தமது வாழ்வை பகுத்தறிவற்ற விலங்கை போல வாழ்ந்தவன் நாகரிகம் வளர்ச்சியடைய தான் மாறுவதோடு தன் சமூகத்தையும் மாற்றிய மைத்தான். ஆரம்ப காலங்களில் இயற்கை யோடு இணைந்து வாழ்ந்த மனிதன் அவற்றை கொண்டே தனது வாழ்வை நடத்தினான். அதாவது மனிதன் இயற்கை யை பாதுகாக்க இயற்கை மனிதனை பாதுகாத்தது எனலாம். எடுத்துக்காட்டாக மனிதன் தனது ஜீவனோ பாயத்திற்காக மேற்கொள்கின்ற அனைத்து நடவடிக்கை களிலும் செயற்கை பொருளின்றி இயற்கை யையே பயன்படுத்தினான். உதாரணமாக விவசாயத்தை மேற்கொள்வது என்றாலும் செயற்கை பொருளின்றி இயற்கையை மாற்றியமைக்காமல் வாழ்ந்தான். இவ்வாறு பலவற்றை கூற முடியும். அதே நேரம் இன்றைய காலகட்டத்தை ஒப்பிடும் போது அனைத்தும் மாற்றமடைந்துள்ளன. மனிதன் செயற்கையால் இயற்கையை மூடி மறைத்துள்ளான் எனலாம் அதாவது மனித னின் அதிகரித்த தொழில் நுட்ப பாவனை மற்றும் அவனது இயற்கை பற்றிய அலட்சிய போக்கு ஆகியன இக்காலங்களில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. மனிதன் எந்தவொரு செயற்பாட்டை மேற்கொள்ளும் போதும் இயற்கையை மாற்றியமைத்தே மேற்கொள் கிறான். அவனது அனைத்து செயற்பாடுக ளிலும் செயற்கை பொருட்க ளையும் தொழிநுட்பத்தையும் பயன்படுத்து கின்றான். அத்துடன் பூகோளமயமாதல், நகராக்கம், ஆகியவற்றால் சூழல் மாற்றம டைந்துள்ள துடன் மனிதனுக்கே அவைகேடு விளைவிக்க கூடியதாகவும் உள்ளது. அதாவது அதிகரித்த தொழிநுட்ப பாவனை கள் மனிதனையும் அவன் வாழும் சூழலையும் மிகவும் பாதித்துள்ளது. இவற் றுள் சூழல் மாசடைதல், பச்சைவீட்டு விளைவு, புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றம் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

சூழல் மாசடைதலில் நீர், வளி, நிலம் மாசடைதலை குறிப்பிடலாம். அதாவது நீர் நிலைகளில் மக்கள் கழிவுகளை கொட்டு தல், ஹோட்டல் கழிவுகள் ஏனைய கழிவுகள் நீரில் கலத்தல், மற்றும் கடல் நீர் மாசடைதல் என்பவற்றை குறிப்பிடலாம். கடல் நீர் மாசடைதலுக்கு முக்கிய காரணி கப்பல்களிலிருந்து வெளிவரும் எண்ணெய் கசிவாகம். அதாவது இன்றைய காலகட் டத்தில் கப்பல் போக்குவரத்து அதிகரித்து ள்ளது.

இதனால் கடல் நீர் மாசடைதலும் அதிக ரித்தே வருகிறது. உதாரணமாக தற்போ தைய காலங்களில் அனைவராலும் பேசப்ப டும் ஒன்றாக இலங்கையில் ஏற்பட்ட கப்பல் தீ விபத்து மாறியுள்ளது. அதாவது கடந்த மே மாதம் நைட்ரிக் அமிலம் இரசாயன பொருட்களை ஏற்றி வந்த கப்பல் இலங்கை கடல் பரப்பில் எரிந்ததால் கடல் நீருக்கும், கடல் வாழ் உயிரினங்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் நாடாளாவிய கடற்கரையோரங்களில் ஆமை மற்றும் திமிங் கலம் போன்றவை இறந்து கரையொதி ங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற் றிற்கு காரணம் கப்பலிலிருந்து வெளிவரும் இரசாயணங்களும் அமிலங்களுமே என ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் விவசாய நடவடிக்கைகளுக்காக் பயன்படுத்துகின்ற இரசாயனங்கள் நீரில் கலப்பதன் மூலம் மனிதர்களுக்கு தீங்கு ஏற்படுவது மட்டுமின்றி கால்நடைகள், பறவைகள் கூட இவற்றினால் இறக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும். உதாரணமாக அரசு இடர் முகாமைத்துவ மையம் இறுதி யாக வெளியிட்டுள்ள தகவல்களின் படி வடக்கு-கிழக்கு உட்பட 8 மாவட்டங்களில் சுமார் 52 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 2 இலட்சத்து 10 ஆயிரம் பேர் குடி நீர் பிரச்சினையை எதிர் கொள்வதாக குறிப்பிடப் பட்டுள்ளது. அத்துடன் இரசாயணப் பாவனை மூலம் மண்ணின் தன்மை, இயல்புகள் மாற்றமடைவதுடன் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு குறித்த விவசாய நிலம் பயன்படுத்த முடியாமல் போகும் நிலை காணப்படுகிறது. மேலும் தொழிற்சாலை கழிவுகளும் நீரில் கலப்பதன் மூலம் நீர் மாசடைவதோடு அவற்றிற்கான சிறந்த வடிகாலமைப்பு இன்மை, அவை தொடர்பில் குறித்த முகாமைத்துவம் அக்கறை செலுத்தாமையும் பிரதான காரணமாக காணப்படுகிறது. தொழிற்சாலைகளினால் வெளியிடப்படும் தொழிற்சாலை வாயுக்களும் வளி மாசடை தலுக்கு பிரதான காரணி ஆகும். உதாரண மாக பட்டாசு தொழிற்சாலைகளிலிருந்து வெளியிடப்படும் வாயுக்களினால் சூழல் மாசடைவதோடு தொழிலாளிகளுக்கும் தோல் சம்பந்தமான நோய்கள் ஏற்படுகின் றமை குறிப்பிடத்தக்கது. மேலும் அதிகரித்த வாகன பாவனையாலும் வளி மாசடைகி ன்றது என ஆய்வு அறிக்கைகளின் மூலம் அறியலாம். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பல மாற்றங்கள் நிகழ்கின்றன நாம் ஒவ்வொருவரும் அவற்றை அறிந்துள்ளோம். நீர் மாசடைவதன் மூலம் விலங்குளுக்கான நீரின்றி அவை இறந்து போவதோடு மனிதர்களின் அன்றாட தேவைகளுக்கு கூட நீர் பற்றாக்குறை ஏற்படுவதோடு நன்னீர் ஏரிகளும் குறைந்து வருகின்றமை குறிப்பிட த்தக்கது.

“நீரின்றி அமையாது உலகு” என்பர். இயற்கையின் வரமாக கிடைத்த நீர் மனித நடவடிக்கைகள் மூலம் அழிந்து போகின் றமை எம் எதிர்கால சந்ததியின் வாழ்வை கேள்வி குறியாக்கின்றது. இவற்றை தவிர வளி மாசடைதலும் சூழலில் பாரிய

மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அவ்வாறான மாற்றங்களாக புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றம் என்பவற்றை குறிப்பிடலாம். அதாவது அதிகரித்த வாகனங்களின் பாவனையும் அவற்றினால் வெளியிடப்படுகின்ற வாயுக்கள், தொழிற்சாலைகளினால் வெளியேற்றப்படுகின்றன வாயுக்கள், பிளாஸ்டிக், பொலித்தீன் போன்றவற்றை எரிப்பதனால் வெளியிடப்படும் வாயுக்களை குறிப்பிடலாம். இவ்வாயுக்கள் வளிமண்டலத்தை பாதிப்பதுடன் சூரியனிலிருந்து வெளி வரும் புற ஊதா கதிர்களை தடுக்கும் ஓசோன் படையையும் பாதிக்கிறது. இதனால் ஓசோன் படை தேய்வடைந்து சூரியனின் புற ஊதா கதிர்களும், வெப்பமும் புவியை நேரடியாக வந்தடைகின்றன. இவ்வாறு ஏற்படுவதால் புவி வெப்பமடைவதோடு மனிதர்களுக்கு சரும பிரச்சனைகள், கண் நோய்கள் என்பனவும் ஏற்படுகின்றன. புவி வெப்பமடைதலால் கடல் நீர் மட்டம் அதிகரித்தல், பனிப்படலங்கள் உருகுதல் ஆகியன ஏற்படுவதோடு சிறிய தீவுகள் நீரில் மூழ்கும் அபாயமும் உருவாகியுள்ளது.

மேலும் பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையால் பச்சைவீட்டு வாயுக்களின் தாக்கமும் அதிகரித்துள்ளது. பச்சை வீட்டு வாயுக்களின் ஒன்றான காபனீரொட்சைட் வாயு இப்பொலித்தீன், பிளாஸ்டிக் போன்றவற்றால் அதிகரித்துள்ளதோடு, காலநிலை மாற்றமும் நிகழ்கின்றது. காலநிலை மாற்றத்தால் பருவ மழை உரிய காலத்தில் கிடைப்பதில்லை, விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமை என பலவற்றை கூறலாம். மனிதன் முன்னேற்ற பாதையை நோக்கி செல்வது தவறல்ல ஆனால் இயற்கையை மாற்றியமைக்காமல் செயற்பட வேண்டும். உதாரணமாக மனிதன் எத்தனை மரங்களை வெட்டுகிறானோ அதற்கு இணையாக மரங்களை நட முயற்சிக்க வேண்டும். காபனீரொட்சைட் வாயுவை உறிஞ்சி கொண்டு மனிதனுக்கு தேவையான ஒட்சிசனை தருவது மரங்கள் ஆனால் மனிதர்கள் அதனை மறந்து இயற்கையை அழிக்கிறார்களே தவிர பாதுகாகக்வில்லை. நாம் எதை விதைக்கிறமோ அதையே அறுவடை செய்வோம் என்பதற்கிணங்கவே இயற்கையும் செயற்படுகிறது எனலாம். ஆகவே நாம் தொழில்நுட்பங்களை உபயோகிப்பது தவறல்ல தொழிநுட்ப கண்டுபிடிப்புக்கள் மனிதர்களுக்கு பல வகையில் உதவுகின்றன. ஆனால் நாம் அவற்றை தவறாக பயன்படுத்தக் கூடாது. இயற்கை வளங்களை வீண்விரயம் செய்யாமை, அவற்றை கவனிக்காது அலட்சிய போக்கில் இருக்காமை என்பன மனிதனாக பிறந்த எம் ஒவ்வொருவரது கடமையாகும். முடிந்தளவு மரங்களை வெட்டாது மரங்களை நாட்டி பசுமையான தேசத்தை உருவாக்க வேண்டும். நாம் மரங்களை நாட்டி அவற்றை பேணிப் பாதுகாப்பதன் மூலமே நாம் வாழும் புவியையும், எமது எதிர்கால சந்ததியினரையும் பாதுகாக்கலாம். இயற்கையை நாம் பாதுகாத்தால் இயற்கை எம்மை பாதுகாக்கும்.

■ ■ ■

# நெகிழி [பிளாஸ்டிக்] தவிர்த்திடு

விஜேந்தினி சுபேந்திரன் (விலங்கு மருத்துவ பீடம்)

நவீன உலகம் அழிவின் பாதையில்
காரணமோ நெகிழியின் ஆட்சி
எழுதும் பேனா முதல் எதிர்த்து
போராடும் ஆயுதம் வரை
நெகிழியின் பயன்பாடு
தலைவிரித்தாடுகிறது

சிலநாள் பாவனை
சிதையாது பலநூற்றாண்டு வரை
மண்ணில் உக்காது
மீள்பாவனை தரமில்லை
எரித்தால் நச்சுவாயு
எமனாகும் ஓசோனுக்கு

பாவித்து வீசுகிறோம்
பொறுப்பற்று
மண்ணைச் சேர்ந்தால்
மண்வளம் பாழாகும்
நீர் வடிகட்டல் இல்லை
குன்றும் நிலத்தடி நீர்வளம்
நீரோடையைச் சேர்ந்தால்
நீர்மாசு நிச்சயம்
மனிதர்க்கோ விலங்குகளுக்கோ
இல்லை சுத்தமான நீர்
கடலைச் சேர்ந்தால் கழிவை
உண்டு மடியும் மீன்கள்
உணவுப்பொதி நெகிழியை
வீசுகிறோம் உணவோடு

அதையும் உண்டு
உணவுக்கால்வாய் அடைத்து
உயிரைத் துறக்கிறது
ஐந்தறிவு விலங்குகள்


சூழல் காத்திட
நெகிழிக்கு மாற்றாக
காகிதம் வேண்டாம்
எரிபொருட்செலவு
சூழல் நேயமிக்க துணிப்பை
பயன்படுத்திடுவோம்

சூழல் பேணிட
எடுப்போம் அவதாரம்
மண்ணின் பிரஜைகளாய்
நெகிழி தவிர்த்திடு
நம் பூமி வாழட்டும்
நெடுங்காலம்.

■ ■ ■

**கிளி வளர்த்தேன்**
**பறந்துவிட்டது. அணில்**
**வளர்த்தேன் ஓடி விட்டது.**
**மரம் வளர்த்தேன்**
**இரண்டும் வந்துவிட்டது.**

Dr. அப்துல் கலாம்





# வசந்தக் காலம்

அரசரத்தினம் கவிராஜ் (இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்)

மாலை நேர மட்டைப்பந்தாட்டம்
மனமெங்கும் பொங்கும் சந்தோசம்//
கண்ணாமூச்சி ஆட்டத்திலும்
தொலைந்து போகாத நண்பர் கூட்டம்//
பாடசாலைக்கு நடந்துசென்ற
பச்சைப்போர்த்திய மண்பாதைகள்//
ஒத்தக்கடையில் வாங்கிச்சுவைத்த
ஒரு ரூபாயக் குளிர்பழங்கள் //

காற்றடிக்கும் காலங்களில்
கையால் செய்த பட்டங்கள்//
வானமெங்கும் வண்ணம்பூசும்
வானவில்லின் கீற்றுக்கள்//
புத்தகத்தில் மறைத்துவைத்த
மயிலிறகின் குட்டிக்கும்//
அக்கறையாய்ச் சோறூட்டிய
அன்பான உள்ளங்கள்//

மழைக்காலம் வந்தாலே
மனமெல்லாம் விழாக்கோலம்//
கடைசிப்பக்கக் கொப்பித்தாளில்
கப்பல்கட்டும் மகோற்சவம்//
மண்பானைக் கூட்டாஞ்சோறு
மணமணக்கும் வீதியெல்லாம்//
சிறுமியர் கூட்டம் நொண்டியாட
சிறுவர்கள் நாங்களோ கபடியாட//

அத்தைமடி மெத்தையென ஒற்றுமையாய்
வாழ்ந்தகாலம்//
ஆற்றுவெளி காட்டுவழி
ஆடிப்பாடித் திரிந்தகாலம்//
கள்ளமில்லாச் சிரிப்போடுத் துள்ளிவந்தப்
பள்ளிக்காலம்//
சொல்லச்சொல்லத் தித்திக்கும் பசுமையான
வசந்தகாலம்

■ ■ ■

**“சிறந்த சுற்றுச்சூழல் கொள்கை என்பது சிறந்த பொருளாதாரக் கொள்கை போன்றது!”**

பெர்னி சாண்டர்ஸ்



# இயற்கை

ஸ்ரீவாணி மகாதேவன் (இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்)

வள்ளுவன் வாக்குக்கு இணங்க இயற்கை பாதுகாப்பு என்ற சொல்லின் பதம் எடுத்துரைப்பவர் பலர் என்றாலும் அந்த எண்ணக்கருக்களின் தத்துவம் வேறுபடு கிறது. "செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்" வள்ளுவன் கூறும் பதம் யாதெனில் நூலறிவால் செயலைச் செய்யும் வகைகளை அறிந்த போதிலும் உலகத்தின் இயற்கை யை அறிந்து அதனோடு பொருந்துமாறு செய்யவேண்டும். இந்த காலப்பகுதியின் மிக பாதுகாப்பற்ற விடயமாக இயற்கை காணப்ப டுகிறது. இயற்கை மாசடைதல் என்ற தலைப்பின் வடிவில் இதை வெளிப்படுத் தலாம். இருந்தாலும் அது பற்றிய கருத்துக்க ணிப்புக்கள் பல இடம்பெற்றவண்ணம் அமை கிறது. இயற்கை என்ற ஒரு அற்புத வரத்தை பாதுகாக்க பசுமை மற்றும் மர நடுகை உதவுகிறது. இதன் விளக்கம் மிக ஆழமாக பார்க்க வேண்டியது அத்தியாவசியமானது ஏன் என்றால் பசுமை உருவாக்கம் எப்பொழு தும் மர நடுகையின் மூலம் உருவாகும் ஆனால் பசுமை இயற்கையை பாதுகாக்கும்.

மரநடுகை பற்றிய சிந்தனை எழுமாற்றான வகையில் மக்களிடையே சிதறிக்கிடக்கிறது. இருந்த போதும் அதன் முழுமை பெறத் தடையாய் அமைவது அறியாமை ஆகை யால் அறியாமையை விரட்ட கல்வி தந்தான் பாரதி என்பது யாவரும் புரிந்துணர வேண் டும். மர நடுகை என்பதன் அர்த்தம் ஒரு செயற்பாடாக அமைந்தாலும் அதன் நோ க்கம் மிகப்பெரியது ஒரு மரத்தினுடைய ஒளித்தொகுப்புச் செயற்பாட்டு விளக்கம் யாதெனில் அதன் உணவுக்காக வளி மண்டல காபனீரொட்சைட் எனும் வாயுவை அகத்துறிஞ்சி ஒட்சிசன் ஆக உருமாற்றம் செய்கிறது. இங்கு நச்சு வாயுவான காபனீ ரொட்சைட் ஆனது பூகோள வெப்பமாதலை செயற்படுத்தும்.

இங்கு மரநடுகை அத்தியாவசியம் என்பது விளக்கம் பெறும் எனினும் இந்த ஒட்சிசன் அவசியம் பற்றியும் எடுத்துரைக்க வேண்டும்.

ஏன் என்றால் பூலோக உயிர்கள் சுவாசிக்கும் வாயு என்பதாலும் அந்த வாயு மட்டுப்படுத்தப்பட்ட ஒன்று என்பதும் விளங்கிக்கொள்ள வேண்டும். அதன் உதாரணமாக தற்போதய நடந்தேறிய விடயத்தை குறிப்பிட விரும்புகிறேன் மருத்துவமனையில் ஒட்சிசன் பற்றாக்குறையால் பலர்மாய்ந்து போனாரே அதற்கு காரணம் கொரோனா என்பர் இருந்தும் அது காட்டும் தடம் இங்கிருந்து ஆரம்பமானது தான். இந்த மர நடுகையின் மூலம் பல இயற்கைக்கு சாதகமான நிகழ்வுகள் நிகழ்கிறது. அதாவது வளி தூய்மை அடையும், ஓசோன் படையின் தடிப்பு அதிகரித்து பூகோள வெப்பமாதலை தடுக்கும் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படும்.

இங்கு பசுமை பற்றி கலந்துரையாடல் தேவையானது ஏன் எனில் பசுமை மனித உணர்வுகளை வளப்படுத்தும், இந்த பசுமை பூகோள வெப்பமாதலை தடுக்கும். இங்கு பசுமை மற்றும் மர நடுகை என்பவற்றை மேற்கொள்ள நீர் மற்றும் வளி என்பவற்றுடன் நிலம் அவசியமானது. நீர் ஒரு இயற்கை வளம் இந்த வளம் பெரும் பகுதி உவர் நீரால் ஆனது. இந்த உவர் நீர் பசுமைக்கு ஏற்ற ஒன்றல்ல. நிலத்தடி நீர், ஏரி, குளம் என பல வளங்கள் உண்டு. எனினும் அதன் அளவு மட்டுப்படுத்தப்பட்டது. ஆகவே நீரின் அடிப்படை உருவாக்கம் மர நடுகையால் என்றால் மிகையாகாது. ஏனென்றால் வளியானது குளிர்வடைந்து ஒடுங்கி முகில் கூட்டங்களை உருவாக்குகிறது. அவை மழையாக பூமியை வந்தடைகிறது. இலகுவாக இதன் வளிமுறை இடம் பெற்றாலும் பல சிக்கலான செயன்முறைகளை கொண்டமைகிறது. இவ்வாறு இயற்கையின் பல கட்டமைப்புக்களை விபரிக்க முடியும். அதனுடன் இந்த பசுமை உருவாக்கத்தினை நாளைய தலைமுறையினர் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இன்றைய இளைஞர்கள நாளைய தலைவர்கள் என்பதால் அவர்களுக்கான புரிதலை ஏற்படுத்த வேண்டும். அதேபோல வளங்களை பேணிப் பாதுகாக்க இளைய சமுதாயம் பழகிக்கொள்ளல் அவசியமானது.

இந்த பூமியின் சில பகுதி நீரால் சூழ்ந்திருந்தாலும் அதன் வடிவம் பல மாற்றங்களை கொண்டமைந்த வண்ணம் உள்ளது. பூமியின் உட்புற தட்டுக்களின் நகர்வால் இந்த மாற்றங்கள் நடைபெறும் என்பது அறிவோம். நிலம் என்பது இயற்கை பாதுகாப்பு மற்றும் பசுமை போன்றவை மட்டுமல்லாமல் மர நடுகையுடனும் தொடர்புடையது. ஏனெனில் அதன் தொழிற்பாட்டின் நம்பகத்தன்மை பூமியில் உள்ளது. இங்கு நில மாசடைதல் பசுமை மற்றும் மர நடுகையை பாதிக்கும். தற்போதைய காலப் பகுதிகளில் நில மாசடைவு பெரும்பாலும் பொலித்தீன் பாவனையால் ஏற்படுகின்றது. அது நிலம் மட்டுமல்லாது நீர் மாசுபாட்டுக்கும் வழிச்செய்கிறது. இவற்றுக்கு சேதனமாகும் திறன் குறைவாதலால் அதற்கு பல ஆண்டுகள் தேவைப்படும். இவ்வாறான பல்வேறுக் காரணங்களினால் சூழல் அதிக


மாசடைவுக்கு உட்படுகின்றது. எனவே இயற்கையை பாதுகாப்பது எம் ஒவ்வொரு வரினதும் கடமையாகும்.

“நாளைய தலைமுறை பேர் சொல்ல
ஏர் உழுவோம்.”

■ ■ ■

**வா**னத்தி லேபிறந்த

**மழையே வா! ~ இந்த**
**வையகத்தைஅ வாழவைக்க**
**மழையே வா!**
**சீனிக்கறும்பு தர மழையே**
**வா! — நல்ல**
**செந்நெல் செழிப்பாக்க**
**மழையே வா!**
**கானல் தணிக்க நல்ல**
**மழையே வா! — நல்ல**
**காடு செழிக்க வைக்க**
**மழையே வா!**
**ஆன கிணறுகுளம்**
**ஏரிஎல்லாம் ~ நீ**
**அழகுப டுத்தநல்ல**
**மழையே வா!**



பாரதிதாசன்

# அன்றோர் கனவு

மிதுர்ஷாஜினி கிரிதேவா (பல் மருத்துவ பீடம்)

நானிலம் கூடி நற்றைத்திங்கள்
பார்த்திருந்து கழனியதில் கைநனைக்கக்
காத்திருந்தார் மனமிருந்தும் மண் இல்லை
அள்ளி இறைக்க அமுதும் இல்லை

மாடங்கள் வேண்டுமென வெட்டினார்
மரங்கள் தனை நீருண்ட மேகம் நின்றது
மறுத்து நிலம் தனை அழல் தனில்
எரித்தார் பாழ்தரும் பதார்த்தங்களை
கரிவாயு கரத்தது கதிரவனின் கற்றைகளை
மக்களும் மறந்தார் குளிர்மையின்
கொடைகளை

செருக்கோடு செழிமை கொண்டாடித் திரிந்த
தேசங்கள் ஒருநெல் பசிபோக்க
கையேந்தும் கதையென்ன? பெருக்கோடி
நிறைந்த பள்ளங்கள் அண்டி தாகங்கள்
தணிக்கும் கரங்களின் கருமமென்ன

தழுவியணைக்கையில் தட்டும் தசைகள்
எண்ணும் எலும்புகள் தானென்று
உணரமுன் விழித்துக்கொண்டார் ஆம்,
வெறும் கனவு தான்: கனவாகவே
இருக்கட்டும

■ ■ ■

# உலகமே உணர்ந்திடு

மு.அனுகூலன் (விவசாயப்பீடம்)

மாசடையும் சமூகத்தை
காணவும் ஏனோ உன் வீட்டு
கழிவுகள் எல்லாம்
சூழலை கெடுக்கிறதே
அறியாயோ மனிதா!
உக்காத பொலித்தீன்
பாவனையால் நாளும
நீயும் மறுக்கிறாய்

உக்காத கழிவுகளுக்கு
தீ மூட்டி நீயும்
ஓசோன் படையில்
பாதிப்பை ஏற்படுத்த
புகையாய் அனுப்புகிறாய்

உக்கிடும் கழிவினையும்
எறிந்தே மகிழ்கின்றாய்
பயன் தரும்
அதன் விளைவை
உணரவே மறுக்கிறாய்

தோட்டத்தின் பசளையாக
மாற்றி அமைத்திட
தெரியாமல் நீயும்
ஆபத்தாய் மாற்றுகின்றாய்
சிந்தித்தே பார்த்திடு
உலகத்தை மாற்றிடவே

ஓசோன் வாயுவை
தேடியே அலையும்
இன்றைய உலகில்
மரத்தையும் வெட்டியே
அழிக்கின்றாய் நீயும்
ஓசோன் எங்கே
கிடைக்கும் கூறிடு

பசுமையாய் மரங்களை
நட்டே காத்திடு
தூய சுவாசிப்பை
வாழ்வாய் மாற்றிடவே

உலகமே உணர்ந்திடு
இயற்கையின் மகத்துவம்
உன்னையும் வென்றிடும்
அதையும் உணர்ந்திடு.

■ ■ ■

விவசாயம் என்பது
**வியாபாரம்**
**அல்ல...**
வாழ்க்கை
முறை!



-நம்மாழ்வார்




அ.யதுசன் (விலங்கு மருத்துவ பீடம்)

வீரிட்டு விரைந்து கொண்டிருந்த மோட்டார் வண்டியின் வேகம் மெல்லிய தென்றலைக் கூட புயல் போல உணர வைத்திருந்தது. ஏற்கனவே மனதில் கனத்துக் கொண்டிருந்த வனுக்கு மேலும் பாரமாய் தலைக்கவசமும் அதன் வேலையைச் சரிவரச் செய்து கொண்டிருந்தது. முகப்பு வாயிலில் நுழைய வேண்டி சற்றே தணிந்த வேகம் மீண்டும் எட்டிப்பிடிக்க நொடிகளில் தரிப்பு மேடையை அடைந்ததிருந்தது வண்டி. வண்டியை நிறுத்தி விட்டு இறங்கவே தூரத்திலிருந்து திரவியம் ஓடிவந்து கொண்டிருந்தான். அவன் வந்த வேகமே எனக்குள் ஒருவித கலக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. இதற்கு மேல் என்ன சொல்லி சமாளிப்பது என்ற எண்ணமே மேலிட்டிருந்தது.

மாஸ்டர் மாஸ்டர் கதச்சனியளே?? என்னவாம் அவை? பதிலுக்கு காத்திராமல் அடுக்கினான் கேள்விகளை.

அதற்குள் ஒன்றும் மனதில் தட்டுப்படவில்லை யென்பதாலோ இல்லை பதிலுக்குத் தட்டுப்பாடாகவிருந்ததாலோ சமாளிக்க முடியாமல், திக்கி நின்றேன்.நொடியில் சுதாரித்தவனாய்,

எவை??

பதிலுக்கு கேள்வியையே நானும் கையிலெடுத்தேன். தொடர விடாது நானே தொடர்ந்தேன்.

நீ யோசியாம வகுப்புக்கு போ..

மாஸ்டர் பாத்துக்கொள்ளுவன் தானே! நீ போய் படியப்பன் என்று கூறி சமாதானத்துக்கு முதுகில் தட்டிக்கொடுத்து விட்டு! மேலும் சம்பாசிக்க நாட்டமற்றவனாய்! அங்கிருந்து மெல்ல நகர்ந்தேன். சற்று தூரம் சென்று திரும்பிப் பார்த்தேன் திரவியம் கவலையாக நகர்ந்து கொண்டிருந்தான். அவன் நடையில் முன்பிருந்த வேகம் இல்லை. அந்த நடையே அவன் நம்பிக்கை இழந்து கொண்டிருப்பதை எனக்குப் படம்போட்டுக் காட்டியது.

ரத்தினன் மாஸ்டர் என்று மாணவர்கள் மரியாதையாக அழைக்கும் நான் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர். வயதான

பெற்றோர் சொந்தஊரில் தனியாக கஸ்டப்பட ப்நான் வேலை நிமித்தம் இங்கு குடியிருக்க வேண்டிய நிலை. கடைசி காலங்களிற் கூட பெற்றோருடன் இருக்க முடியாத துரதிஷ்ட பிள்ளையாகிப் போனேன். அரசாங்க உத்தியோகம் பார்க்கும் பலரும் போல ஐந்து வருடங்கள் வெளியூரில் (குறிப்பாக மிகவும் கஷ்ட பிரதேசங்களில்) சேவை யாற்றிய பின்னர் தான் சொந்த இடங்களுக்கு மாற்றலாகிப் போக முடியும். சொந்த ஊரிற்கு இடமாற்றம் கேட்டு அழும் பல உத்தியோக அகதிகளில் நானும் ஒருவன்.

எங்களுடைய பள்ளிக்கூடம் கிட்டத்தட்ட 75 வருடங்கள் பழைமையானது. பங்குனி வந்தால் பவள விழாவை பூர்த்தி செய்யப் போகின்றது. விழாவை வெகு விமர்சையாகக் கொண்டாடுவதற்கு எமது பிரதி அதிபர் தலைமையிலான பள்ளிக்கூட நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. பாடசாலைக்கு அதிபர் இல்லாததால் எல்லா முடிவுகளையும் எடுக்க கனம் பிரதி அதிபர் ஐயா தகுதியான வராகிறார். ஐயா மிகவும் நல்ல மனிதர் தான், என்ன அவரது ஆட்சியில் சனநா யகம் கொஞ்சம் வறட்சி கண்டுவிட்டது. அவர் பாடசாலையின் பழைய மாணவர், அத்துடன் ஊரிலும் சொல்லிக் கொள்ளு மளவு பெரிய அந்தஸ்தில் உள்ள மனிதர், கொஞ்சம் கோபக்காரன். அவர் நினைப்பதை சரிபிழைகளிற்கு அப்பால் சாதித்து முடிக்கும் காரியபுருசன். ஆகையினாலே விழா நடா த்தும் முடிவும் ஐயாவின் தனிப்பட்ட சனநாயக முடிவு.

அதற்கு ஏனையவர்கள் தலையை ஆட்டி எங்கள் கடமையைச் சரிவர செய்திரு ந்தோம். விழாவுக்குப் பெரிய அளவில் ஏற்பாடுகள் நடக்க தொடங்கியிருந்தது. பந்தல் போடுவது குறித்து கேள்வி வந்த போது மைதானத்தில் அமைப்பதென்று முடிவானது. அங்கு தான் பிரச்சினைக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது.

எங்கள் மைதானம் ஓரளவு பெரியதுதான். மைதானத்தின் இடையில் பெரிய ஆலமரம் ஒன்று உள்ளது. அது மரமென்பது உள்ளே வந்து பார்த்தால்தான் தெரியும். தூரப் பார்வைக்கு மலையாகவே தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. விழுதுகள் ஒவ் வொன்றும் ஒரு தென்னையின் பரிமாணம் கொண்டவை. அவ்வளவுக்கு பிரமாண்டம் அதன் உருப்படி. கொட்டகைகளிற்கு பஞ்ச மாகவிருந்த பள்ளிக்கூடத்தின் முன்னகவை காலங்களிலெல்லாம் ஓரிரு வகுப்புக ளையேனும் தன் நிழல் அரசாங்கத்தின் கீழ் அமர்த்தியிருந்த புராதனத்தின் நிமித்தமோ என்னவோ இன்றும் கோடை கால வகுப்புகளில் அனேகம் மரத்தின் கீழ் தஞ்சமடைந்துவிடும் சம்பிரதாய வழக்கமும் உண்டு. இது தவிர பிராந்தியத்து பறவைகளுக்கெல்லாம் உணவு வசதியுடன் கூடிய இலவச சத்திரமாகவும் விளங்குகிறது. இப்படி பல தலைமுறைகளை கண்டு உறவாடி வளர்ந்திருந்த மரம் மைதானத்தின் பெரும் பகுதியை தன் குடையின் கீழ் கொண்டுவந்துவிட்டிருந்தது நிதர்சனம்.

தற்போது உள்ள பிரச்சினை என்னவென்றால் ஐயாதான். இல்லை இல்லை அந்த ஆலமரம்தான். பந்தல் போடுவதற்கு மரத்தை அகற்றியே ஆகவேண்டும் என்பது ஐயாவின் ஆழ்ந்த நம்பிக்கை. அதற்கு வேறு காரணங்களும் இருப்பதாகக் கேள்வி இருப்பினும் வெளிப்படைக்கு இல்லை.

மரத்தைத் தறித்து அகற்றுவதற்கு ஒரு நல்ல நாளைக் குறித்துவிட்ட ஐயா அந்த விடயத்தை ஒரு கூட்டுப்பிராத்தனையின் இறுதி நிகழ்வாக அறிவிப்பு செய்தார். அன்று தொடங்கிய பிரச்சனை இன்றளவிலும் காரம் குறையாமல் இன்னமும் ஓடிக்கொண்டிருக்கிறது. சொல்லப் போனால் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகிறது.

இது ஒரு பக்கம் இருக்க என்னை ஒருநாள் கனிவாக அழைத்த ஐயா!

ரத்தினன் மரம் தறிக்கிறது உம்மட பொறுப்பு. என்ன மாரி செய்ய ஏலுமோ?

ஓம் ஐயா பிரச்சினை இல்ல செய்யலாம் என்று ஐயாவின் விரலசைவிற்கு தலையசைக்கும் பொம்மை இரத்தினன் கூறி முடித்தேன்.

எமது பள்ளியில் ஊர் பிள்ளைகளே அதிகம். கனிஷ்ட (O/L) பிரிவில் எனக்கு மிகவும் நெருக்கமான மாணவர்களில் திரவியம் முக்கியமானவன். அவன் நல்ல கெட்டிக்காரன், நன்றாக படிப்பவன், இயற்கை ஆர்வலன். மரம், செடி, கொடி, பூ, காடு, பறவை என்று இயற்கை மீது அலாதிப் பிரியம் கொண்டவன். அது போதாதற்கு பாடசாலைப் பசுமைக் கழகம் ஆரம்பிக்கபட்ட காலத்திலிருந்து சாதாரண ஊழியனாக இருந்து இன்று அதன் பொறுப்பாளராக இருக்கின்றான். அதிலும் கணிசமான கைவண்ணம் என்னுடையது. ஒருவேளை அதுதான் நான் செய்த பெரிய தவறோ தெரியவில்லை. சும்மா இருந்தவனை பெரிய இயற்கை ஆர்வலனாக்கியது. திரவியம் மட்டுமில்லை அநேக மாணவர்களை இயற்கைக்கு பைத்தியமாக்கிய பெருமைக்கும் உரிமைகோரும் பேறு எனக்கொருவனுக்கே உண்டு. முறைப்படி பார்த்தால் அது சாதனைப் பட்டியலில் வரவேண்டும் என் நேரம் சோதனைப் பட்டியலில் வந்து நிற்கிறது

எங்கும் எதிர்ப்பலைகள் ஆனால் அவற்றை ஒரு பொருட்டாகவேனும் ஐயா மதித்ததாகத் தெரியவில்லை. மரத்தை அகற்றுவதில் நூறு சதவீதம் உறுதியாக இருந்தார்.

மாணவர்களும் ஓரிரு ஆசிரியர்களும் சேர்ந்து ஐயாவின் முடிவைப் பகிரங்கமாகக் கேள்விக்கு உள்ளாக்கினர். மேலும் ஒரு படி மேலே போய் அமைதி, அற வழியில் போராட்டங்களும் நடத்தி வருகின்றனர். இது இவ்வாறிருக்க என்னை ஒத்த இன்னொரு கூட்டம் ஐயாவுக்கு ஒத்திசை பாடவும் தவறவில்லை. இப்படியாகப் பள்ளிக்கூடம் இரண்டாகி கிடக்கிறது.

இவ்வாறாக எண்ணங்களை மீட்டபடி ஓய்வறையை வந்தடைந்திருந்தேன்.

மெதுவாக ஒய்வறையினுள் நுழைந்த நான் வழமையான வாங்கில் வந்து அமர்ந்தேன்.

மாஸ்டர் ஓடியாங்கோ..!

பதைபதைத்து கூக்குரல் வந்த திசையில் ஓடினேன். மரத்தைக் காப்பாற்றவேண்டி பதாகை கட்டிக் கொண்டு இருந்த திரவியம் கிளை ஒடிந்து கீழே விழுந்ததில் துடித்துக் கொண்டிருந்தான். இரத்த வெள்ளத்தில் கிடந்த திரவியத்தை பார்த்த போது எனக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. கணத்தில் சுதாகரித்துக்கொண்டு நானும் வேறு மாணவர்களும் சேர்ந்து மோட்டார் சைக்கிளில் ஏற்றி ஒரு வழியாக டவுன் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து சேர்த்தோம் .கடைசியாக அவனை உள்ளே கொண்டு போய்ச் சேர்க்கும் வரையிலும் மரம் மரம் என்று பினாத்திக்கொண்டிருந்தான். இந்த நேரத்திலும் கூட மரத்துக்காக அவன் அழுதது எனக்கு சற்று எரிச்சல் ஊட்டி னாலும் அவனது கள்ளமற்ற இயற்கை மீதான காதல் எனக்கு ஒருவித பெருமி தத்தை ஏற்படுத்தவும் தவறவில்லை.

இதில் நான் எங்கே? ஏன் அங்கே நிற்க வேண்டும்? என்னை சந்தர்ப்ப வலை இறுக்கிப் பிடித்திருந்தது. இயற்கை, மரம் எல்லாம் முக்கியம்தான் ஆனால் அப்போ தைக்கு எனக்கு அனைத்தையும் விட இடமாற்றம் தான் முக்கியமாகத் தெரிந்தி ருந்தது. எப்பாடு பட்டாவது ஐயாவின் ஒரு சிபாரிசு பெற்றால் இடமாற்றம் உறுதி என்பது எவ்வளவு உண்மையோ அதேயளவு அவரைப் பகைத்தால் இடமாற்ற கனவு தவிடுபொடியாகும் என்பதே என் பயம். திடமாக ஐயாவின் அணியில் ஒரு இடம் பிடிப்பது என்று தீர்மானம் எடுத்து அதற்கான வேலைகளிலும் இறங்கி ஐயாவின் நன்மதி ப்பையும் ஓரளவு சம்பாத்தித்துவிட்டிருந்தேன். எப்படியோ காரியம் கைகூடி வந்துவிடும் என்று அங்கலாய்த்து இருந்தவனுக்கு சோத னையாகவே இந்த சம்பவம் நிகழ்ந்தேறி யிருக்கிறது.

ஐயாவின் பணிப்பின் கீழ் மரம் தறிக்க மறுப்பு சொல்ல முடியாத பாக்கியசாலி இரத்தினன் ஒத்துக் கொண்டுவிட்டிருந்த போதிலும் இவ்வளவு நாளும் செய்த ஆசிரிய சேவைக்கான அங்கிகாரத்தை, சேவையால் சம்பாதித்த நற்பெயரை, நல்ல ஆசிரிய மாணாக்க உறவை மரத்துடன் சேர்த்து சரித்துவிடவும் தயாராக இல்லை. இப்படியாக இரண்டும் கெட்ட கதையானது என் நிலை. ஒரு பக்கம் ஐயாவின் சிபாரிசு கடிதத்திற்கான தேவை! மறு பக்கம் ஆசிரிய சேவையின் அத்தியாயங்களை செல்லரிக் காமல் காப்பாற்றுவதற்கான தேவை எந்தப் பக்கம் நிற்பது??

இதே குழப்பத்திலேயே இன்றும் விடிந்திரு ந்தது. காலையில் நடந்த திரவியத்துடனான உரையாடல் இனிமேலும் என் பொய்கள் எனக்கு கை தராது என்பதை உணர்த்தத் தவறவில்லை. இன்று வரைக்கும் இரு பக்கமும் சமாளிக்க நான் கையிலெடுத் திருந்த ஆயுதம் பொய்.

இன்று காலையிற் கூட மேலதிகாரிகளுடன் இதைப் பற்றி கதைத்தீர்களா என்ற திரவிய த்தின் கேள்விக்கும் பொய் கூற வேண்டியதா யிற்று. இப்படியாக காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறேன் அடுத்து செய்வது அறியாது. ஒரு பொய்! அதற்கு மேல் இன்னொரு பொய்! மறைக்க மற்றொரு பொய் என்று போய்க்கொண்டிருக்கிறது. ஏதோ இந்த பொய் விசயத்திலாவது இரு பக்கமும் பக்கச்சார்பற்று நிற்பதில் ஒரு அற்ப பெருமை.


மனிதர்கள் சந்தர்ப்பவாதிகள், சந்தர்ப்பங்கள் அபரிவிதமானவை. ஒவ்வொரு வரையும் ஆட்டிவைப்பதில் அலாதி பிரியம் கொண் டவை. திரவியமோ நானோ இதற்கு விதிவிலக்கு பெற்றிருக்கவில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகளிற் கட்டுப்பட்டு முடிவுகளை எடுக்கவும் காரியங்களை செய்யவும் விதிக் கப்பட்டவர்கள். காரண காரியங்களின்றி இங்கு எதுவும் நடப்பதில்லை. ஆனாலும் முடிவுகளிற்கு நாம் மட்டுமே பொறுப்பாளிகள் என்று நாளை ஆகிவிடுகிறோம். காலமும் காரணங்களும் நீர்த்துப்போகும் வரையில், நல்லதோ கெட்டதோ பலனையும் பழியையும் சுமக்க கடமைப்பட்டுவிடுகிறோம்.

நேற்றுவரை ஆழ்மனதில் அடைபட்டு திணறிக்கொண்டிருந்த மனச்சாட்சி இந்த சம்பவத்தை ஒரு வடிகாலாக தேடியிருந்தது. தேவைகளை தீனியாக்கிக் கொண்ட சுய நலப்பீடைக்கும் வஞ்சிக்கப்பட்டிருந்த இயற் கை மீதான பாசத்துக்கும் நடந்து வந்த போராட்டம் கரையை கண்டுவிட இத்தனை நாள் என்னை படுத்திய கேள்விகளும் எண்ணங்களும் ஒருவழியில் திருப்தி கொண்டுவிட்டன. எனக்கான சந்தர்ப் பங்களும் சூழ்நிலைகளும் பூரணப் பட்டுவிட்டன. திரவியத்துக்கு கடைசியாக நான் உரைத்த தேறல் மொழிகளால் அவன் கண்களில் புது நம்பிக்கையே பிறந்து விட்டிருந்தது. நடப்பது நடக்கட்டும் வருவது வரட்டும். இதற்கு மேல் ஒரு கணமும் நூலின்மேல் நடக்க நான் தயாரில்லை. திடமாக முடிவொன்றை எடுத்திருந்த பெருமிதத்துடனும் அதற்கு தக்க காரணங்களை கற்பித்தபடியும் வேகமாக மோட்டார்வண்டியை வீதியில் முடுக்கி விட்டேன். இப்போது தலையில் தலைக் கவசத்தின் பாரத்தை மட்டுமே உணர முடிந்தது. ஒரு தெளிவுடன் நிமிர்ந்தேன் நாளின் கடைசி கணங்களை கதிரவனின் கீற்றுக்கள் வாஞ்சையுடன் கிறுக்கிக் கொண்டிருந்தன.

■ ■ ■

**இயற்கையால் மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியும். பேராசையை ஒருபோதும் பூர்த்தி செய்யமுடியாது!**

-மகாத்மா காந்தி



## மங்கல தென்றல் அது

பிரியங்கா தில்லைநடேசன் (விலங்கு மருத்துவ பீடம்)

கண் அறியா இழந்தென்றல் - அது
நினைவிருக்கும் காலம் ஒன்றில்
எத்தனையோ சுமந்து வரும்
நன் மலர் நாற்றங்கள்
நல் இளமை ஞாபகங்கள்
இழந்து விட்ட எதையோ ஒன்றை
இப்படி எத்தனை எத்தனையோ...

தெற்கிருந்து தென்றலாக
வடக்கிருந்து வாடையாக
கிழக்கிருந்து கொண்டலாக
மேற்கிருந்து மேலையாக
வீசிய மங்கல தென்றல் -அது

"தென்றல் "அதை நினைப்பதற்கே
காரணங்கள் அற்று போகும்
தென்றல் உடன்
எல்லாம் அற்று இருக்கும்
காலங்கள் தொலைவில் இல்லை

காலநிலை மாற்றத்தில்
மங்கல தென்றல் - அது
காணாமல்
கலைந்து செல்ல
காரணம் என்னவோ
"பூமி" இல்லை
ஆழ் மனத்தின்
நியாயங்களில்
நான்-நீ - நாம் மட்டும் தான்

■ ■ ■

## இயற்கையின் அழகு...

ர,கனிரதன் (முகாமைத்துவ பீடம்)

இயற்கை உறவு தாய் - சேய்
உறவு
தங்கச் சூரியனின் தங்கக் கதிர்கள்
பட்டு மின்னும் பனித்துளிகளின்
கொள்ளை அழகும்
இளந்தென்றல் காற்றின்
இனிமையான வருடலும்
பச்சைப்புல் வெளியின்
பச்சைக் கம்பள உறக்கமும்
பூடு தேடும் வண்டினங்களின்
இனிமையான கானமும்
சில்லென மேனியை நனைந்து
சிதறும் மழைத்துாறல்களும்
புதுமணம் வீசும் புதுரோஜாவின்
மெல்லிய ஸ்பரிசமும்
ரசிக்க ரசிக்க
ரசனையை ஊட்டும்
ரசிப்பதற்கு இயற்கையை
தவிர வேறென்ன வேண்டும்
இவ்வுலகில்...

■ ■ ■

# சூழல் மாற்றத்தில் மனிதன்

இராதாகிருஷ்ணன் நிதுஷா (கலைப்பீடம்)

இயற்கை உலகு
இயந்திர வாழ்கை
மாசுபடுத்தி மாசுடன் வாழ்க்கை
காற்றும் கடனுக்கு வாங்கும்
கடைசிக் காலமிதே!
மருதம் எல்லாம்

மருந்தால் விளைகிறது
நஞ்சை உண்ணும்
நாடுகளில்
நமக்கே முதலிடம்.

நீரோட இடமில்லை
நீந்தி விளையாட குளமில்லை
காணிகள் எல்லாம்
கேணிகள் ஆகிறது
வெள்ளநிவாரணம் கொள்ளை போகிறது.

மழை பெய்தவுடன்
மணல் வியாபாரமும்
கட்டிடங் கட்டிட
காடழிப்பு திட்டங்களுமே
இங்கே அபிவிருத்தியாகிறது.

வனங்கள் எல்லாம்
வசதி படைத்தோனின்
வடகை வீடாகிறது
சூழல்மாசை சுட்டிக்காட்டினால்
வலைவீசித் தேடப்படும்
வீரப்பன் ஆகிறான்

ஒவ்வொரு மனிதனும்
இன்னும் கொஞ்சம்
யோசித்தால்
இயற்கையை நேசித்தால்
சுதந்திரகாற்றை இப்புவி பெற்றிடும்.

பசுமையும் உண்டிங்கே
பச்சையமும் உண்டிங்கே
மாற்றமில்லாமல்ப்புவியில்
பெற்றிடுவாய் பேறு மானிடனே.

■ ■ ■

பூமி மனிதனுக்கு சொந்தமல்ல...
மனிதன் தான் பூமிக்கு சொந்தம் !
(சியாட்டல்)

# மெல்லக் கொல்லும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாடு

திகழினி சுதானந்தன் (விஞ்ஞான பீடம்)

இன்றைய நவீன உலகில் விஞ்ஞானத்தின் வியத்தகு கண்டுபிடிப்புக்களால் உலகிற்கு பல்வேறு நன்மைகள் கிடைத்த போதிலும் விரும்பத்தகாத சில விளைவுகளும் ஏற்பட த்தான் செய்கிறது. பூமியின் நித்திய நிலவு கைக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைவது சூழல் மாசடைதலாகும். சூழல் பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கும் மாசாக்கிகளுள் திண்மக் கழிவுகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அவற்றுள் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனை பூமிக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனை 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே மக்கள் பயன்பாட் டிலுள்ளது. அவை அன்றாட பாவனைக்கு இலகுவானதாகவும் பாவனைக்குப் பின் தூக்கி வீசக்கூடியதாகவும் விலை குறை வாகவும் இருப்பதால் அவற்றின் பாவனையும் அதீத அளவில் அதிகரித்து சூழல், மனிதன், மற்றும் பல உயிரினங்களுக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் அரக்கனாக விஸ்வரூபமெடுத்துள்ளது. பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் உக்கு வதற்கு சுமார் 15-1000 வருடங்கள் வரை ஆகலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர் (plastic bag-20 years, plastic water bottle-450 years). அவை உக்கும்போதும், எரியும் போதும், கரையும்போதும் வெளிவிடுகின்ற இரசாயனங்களினால் சூழலுக்கு பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இக்கழிவுகள் உக்கும்போது சிறுசிறு துகள்களாக மாற்ற மடைந்து மழைநீருடன் கலந்து நிலத்தடிநீர் மற்றும் நீர்நிலைகளில் சேர்ந்து சூழற் தொகுதியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை எரிப்பதும் சிறந்த முறையல்ல. ஏனெனில் அவற்றை எரிக்கும்போது பல்வேறு வாயுக்க ளையும் நச்சுப் பொருட்களையும் வெளிவி டுகின்றன. உதாரணமாக மிதேன், வீனைல் குளோரைட்டு, டைஒக்சின், பெத்தலேஸ் மற்றும் சேதனமாசாக்கிகள் போன்றவற்றை குறிப்பிடலாம். இதனால் புவி வெப்ப மடைதல், காலநிலை மாற்றங்கள் போன்ற சூழற் பாதிப்புக்கள் ஏற்படலாம். மேலும் மழைக்காலங்களில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருட்கள் வடிகால்களை அடைப்பதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட



வாய்ப்புள்ளது. அது மட்டுமல்லாது பிளாஸ்டிக்கப், பொலித்தீன்பை போன்றவற்றில் நீர் தேங்குவதால் நுளம்புகள் பெருக்கமடைந்து டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் ஏற்படும் அபாயமும் அதிகம் காணபடுகிறது. பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் போது உருவாகும் விச வாயுக்களின் அளவைக் குறைப்பதற்காக மீள்சுழற்சி முறையை விஞ்ஞானிகள் பரிந்துரை செய்தனர்.

இருப்பினும் மீள்சுழற்சியின் போதும் அதேயளவு விச வாயுக்கள் வெளிவரத்தான் செய்கின்றன. வருடந்தோறும் சராசரியாக 165 மில்லியன் தொன் பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுகள் கடலில் கலப்பதாக அறிக்கையொன்று கூறுகின்றது. இவை கடலில் பிரிகையுறும் போது சகதிவாய்ந்த நச்சுப்பொருட்களான பயோபினோல்-ஏ, பொலிஸ்றைற்றீன், கட்மியம், ஈயம், இரசம் போன்றவற்றை வெறிவிடுகின்றன. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுவதோடு அவற்றை உணவாக உட்கொள்ளும் மனிதர்களுக்கும் புற்றுநோய், நோயெதிர்ப்பு சக்தி குறைதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படுவதற்கும் சாத்தியமுள்ளது.

பிளாஸ்டிக் உற்பத்தியின் போது சேர்க்கப்படும் சில சேர்மானங்கள் மனித உடலின் அனுசேபத் தொழிற்பாட்டை பாதிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தற்காலத்தில் சிறுவர்கள் முதல் வேலைக்கு செல்லும் பெரியவர்கள் வரை தண்ணீர் கொண்டு செல்வதற்கு பிளாஸ்டிக் போத்தல்களையே அதிகளவில் பயன்படுத்துகின்றனர். பிளாஸ்டிக் போத்தல்களின் நிலைத்திருக்கும் தன்மையை ஏற்படுத்த பயன்படுத்தப்படும் சேர்மானங்கள் (phthalates,BPA) ஆண், பெண் இருபாலரிலும் கணிசமான ஹோர்மோன் தாக்கத்தை ஏற்படுகின்றன. பிளாஸ்டிக் இன்றைய காலகட்டத்தில் பல்வேறு துறைகளில் மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது. அவற்றுள் முக்கியமானது விளையாட்டுத் துறையாகும். சிறு குழந்தைகள், பள்ளி மாணவர்கள் என அனைத்து சிறார்களும் விளையாட்டுப் பொருட்களை தமது வாழ்வின் அங்கமாக கொண்டுள்ளனர். அளவில் சிறியதான விளையாட்டுப் பொருட்களை குழந்தைகள் வாயிலோ, மூக்கிலோ உட்செலுத்துவதன் மூலம் சில துர்மரணங்கள் சம்பவித்துள்ளமை உலகளாவிய ரீதியில் பெரும் கண்டனத்துக்குள்ளாகியது. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு விளையாட்டுப் பொருள் உற்பத்தியிலும் அதனைப் பயன்படுத்தக்கூடிய ஆகக்குறைந்த வயதெல்லை அச்சிடப்பட்டது. பெரும்பாலான வீடுகளிலும் கடைகளிலும் உணவுப் பொருட்களை சேமிப்பதற்கும் பொதி செய்வற்கும் பொலித்தீன் பைகளையும், பொலித்தீன் தாள்களையுமே அதிகளவில் பயன்படுத்துகின்றனர். வெப்ப மான உணவுகளை பொலித்தீன் தாளில் (Lunchsheet) பொதி செய்யும் போது அதிலுள்ள இரசாயனங்கள்




வெப்பத்தின் காரணமாக பிரிகையடைந்து உணவுடன் கலந்து உடலினுள் சேர்வதால் புற்றுநோய், நாளமில்லாக் கலங்களின் சீர்குலைவு, பிறப்புக் குறைபாடு போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படலாம். மேலும் சிறுவர்கள் பொலித்தீன் பைகளை தலையில் சுற்றுவதால் மூச்சுத்திணறி சில நேரங்களில மரணம் கூட சம்பவிக்க வாய்ப்புள்ளது.

பல நூற்றாண்டுகளாக பிளாஸ்டிக், பொலித்தின் பொருட்களுக்கு மக்கள் அடிமையானதன் விளைவாக இவற்றின் பாவனையை முற்றாக தடை செய்வதில் உலக நாடுகள் பெரும் சாவல்களை எதிர்நோக்குகின்றன. மக்கள் மத்தியில் சரியான விழிப்புணர்வின்மையும் மக்களின் அலட்சியப்போக்குமே இதற்கான பிரதான காரணங்களாகும். இவற்றின் பாவனையைக் குறைப்பதற்கான அவசியம் பற்றியும் அதற்கான மாற்றுவழிகளையும் ஆய்வாளர்களும் சமூக ஆர்வலர்களும் கூறிய வண்ணமே உள்ளனர். உதாரணமாக உணவைப் பொதி செய்வதற்கு பொலித்தீன் தாள்களுக்குப் பதிலாக வாழையிலைகளைப் பயன்படுத்தல், பிளாஸ்டிக் பைக்குப் பதிலாக துணிப்பை அல்லது பிளாஸ்டிக் தவிர்ந்த வேறு பைகளைப் பயன்படுத்தல், பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றீடாக மரத்தாலான அல்லது பிளாஸ்டிக் தவிர்ந்த வேறு பொருட்களைப் பயன்படுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவற்கான சிறந்த ஊடகம் மாணவர்களே. பாடசாலைகள், கல்லூரிகள், மற்றும் பல்கலைக்கழகங்களில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையால் சூழலுக்கும் மனிதனுக்கும் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும் அவற்றின் பயன்பாட்டைக் குறைப்பதன் அவசியம் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததியினரை பொலித்தீனற்ற அழகிய சுத்தமான உலகில் வாழவைக்க முடியும். பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனைக்கு எதிராக பல்வேறு குரல்கள் இன்றளவிலும் உலக அரங்குகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. இதனையடுத்து உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகள் சட்டங்களையும் தடை உத்தரவுகளையும் அமுல்படுத்தியுள்ளன. அந்த வகையில் இலங்கையும் 2017 புரட்டாதி முதல் அமுலுக்கு வரும் வகையில் சட்டமொன்றை உருவாக்கியது. அதன்படி 20 மைக்ரோனிற்கு குறைவான பொலித்தீனை உற்பத்தி செய்தல், பயன்படுத்துதல்,

பிளாஸ்டிக் மற்றும் பொலித் தீன் பொருட் களை திறந்த வெளியில் எரியூட்டல் போன்ற நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டது. இருப்பினும் மக்கள் இச்சட்டத்தைப் பின்பற் றுவதில்லை என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது. ஆரசாங் கத்தால் சட்டங்கள் கடுமையாக நடை முறைப்படுத்தப்படாமையும் மக்களின் அசமந் தப்போக்குமே இதற்கான பிரதான காரண ங்களாகும். நம்மை வாழவைக்கும் பூமியை யும் இயற்கைச் சூழலையும் அதன் கட்ட மைப்புக் குலையாதவாறு பாதுகாப்பது ஒவ்வொரு தனிமனிதரினதும் தலையாய கடமையாகும். சமூகத்தில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் அனைவரும் நம்மிலிருந்தே மாற்றத்தை ஆரம்பிக்க வேண்டும் இதனை ஒவ்வொருவரும் உணர்ந்தால் மட்டுமே பூமியில் வாழும் உயிரினங்களை மெல்லக் கொல்லும் பொலித்தீன், பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை முற்றாக தடுக்க முடியும்.

■ ■ ■

# எனை நானே கேட்கின்றேன்

க.மாலவன் (பொறியியல் பீடம்)

தப்பிப் பிழைத்துத் தடக்கி எழுந்து
முட்டி முனகி மூச்சுத்திணறி
கிறுக்கலில் உனை எழுதி
தெருக்களில் தனித்திருந்து
வடுக்களில் உனை வரைந்து
அவள் பெயரை
என்னும் எத்தனை தடவைகள்
துடித்திருப்பாய்?
பற்றிப் படரும் கொடியாகி
அவள் நெற்றி நடுவில் மழையாகி
கடல் கற்றுத் தவழும் அலையாகி
நொடி முற்றும் முழுதும் கனவாகி
செடி பட்டுப்பகலும் இரவாகி
நுதழ் இல்லை உனதும் உறவாகி
என அந்தம் அதிலும் அறிவாயோ?
இலையாடும் மழைநீரே நீ என்று நிலம்
வருவாய்?
எனை நானே கேட்கின்றேன்
பனிமூடும் பகலாகிப் பதில் மூடக் காதல்
என்று முடிவேனோ......

■ ■ ■




யோகராஜன் கர்ணிகா (கலைப்பீடம்)

துடிக்கும் இதயத்தை
தூசிதட்டி
உறவில்லா உணர்வு
உறவிடம் கேட்டதை
உணர்ந்தேனடா
துயிலுக்குள் என்னுணர்வு
கொள்ளை போனதை
விடியலின் விளிம்பில்
நான்
விகற்பம் கொள்வதை
உணர்கிறேன்.
என் விசனமற்ற
உலகுக்கே ஒளி தந்து
என்னை
வரவேற்கின்றாயே!

காதலனே
உன் காதல் பார்வை
என்னை சுடுகின்றது.
என்னை தீண்ட
கதிர்களை
அனுப்புகின்றாயே
அவை என்னுணர்வை
தூண்டி செல்வதை
நீயுணர்வாயா?
உன்னருகில் வர
நினைக்கின்றேன்.
ஏன்? என்னை
சுடுகின்றாய். என் அன்பே.

உனக்கு
மாலைப்பொழுது
மயக்கமா?
தென்றலாய் என்னை
முத்தமிட்டு
செல்கின்றாயே!
இதமாக தீண்டும் போது
இதயத்திலுள்ள
இன்னல்களும்
இடிந்து இன்னிசை
பாடுகின்றதே!
பகலில் பரவசப்படுத்தி
நட்சத்திர மேடையில்
ஏன் இந்த நிலவு நாடகம்?

என்னுறவினர்களை
உறக்கமெனும் மாயையில்
கட்டி விட்டு
என்னோடு
உறவாடுகின்றாயே
உன் சூக்சுமம்
அறிவேனாடா?
உன்னை நான் பார்க்கும்
கணத்தில்
என்னுணர்வை திருடும்
யுக்தியை உன்னையன்றி
யாரறிவாரோ?

என்னோடு நீ
கொள்ளும் காதல்
நாடகத்தை உலகம்
இயற்கை என்கிறதே!
ஒளியில்லா இரவில் நாம்
ஒழிந்து பிடித்து ஆடும்
போது
நீ ஒழிகின்றாய்
அமாவாசை என்றனர்.
உன்னை
கண்டுப்பிடித்தேன்
பௌர்ணமி
என்கின்றார்களே.
மழையோடு நான்
மழலை மொழி பேசுவதும்
இடியில் உன்
இங்கீதம் உணர்வதும்

தனிமையில்
இனிமையுணர்வது
உன் காதலாலேயே!
அதோ...
மின்னலினால் உன்
காதல் மிகுதி அறிவதை
நான் யாரிடம்
சொல்வேனடா?
அந்த கருங்கல்லில் கூட
காவியம் உணர்கிறேன்.
கருங்கல்லின் காவியம்
நதி
கடலோடு கலந்தும் கூட
எனக்கு காவியம்
பாடுகின்றாயே...
நதி சாரலில்
நாணல் தொலைத்தேன்.
கடலலையில்
என்னுணர்வை
அலை மோத
விட்டேனடா?

ஆகாயமெனும் நம்
இல்லத்தில்
நாம் இல்லறம்
கொள்வதை
உணர்கிறேன்.
மேகம் திரையிட
என் பெண்மையை உணர
செய்யும்
உன் நாகரிகத்தில் நான்
நனைந்து போகிறேனடா!

வாழ்வின் அர்த்ததையும்
வாழ வேண்டியதன்
யதார்த்தத்தை
நீயுடன் வர
நான் உணர்கின்றேனடா?

விலங்குகளில்
விசித்திர குரலில்
திராவிடம்
கலந்துள்ளதையும்
சுவாசிக்கும் கணம் கூட
வாழ்வின் ரணம் ஒதுக்கி
வாசம் செய்விக்கின்றாயே!
எனக்கு பரிசளிக்க
புஷ்பங்களை
புதுப்பித்தாயா?
ஐம்பொறிகளில்
ஐம்பூதத்தால்
உணர்கிறேன்
நம் காதலை.

இத்தனை படைப்பும்
நம் காதல் பரிசா?
பலர் என்னை பைத்தியம்
என்கிறார்களே!
உன் நியதியையுணர்ந்து
உன்னோடு இயைந்ததை
யாரறிவாரோ?
என்னோடு சண்டையிட்டு

கோபம் கொண்டு
அனர்தித்து செல்கிறாயே

இது நியாயமா?
காதலின் முக்தி நிலை
இணைவது
நாம் கொண்ட காதல்
தூய்மையான
நம்முணர்வை வென்றது.

என் துக்கத்தையும்
கண்ணீரையும் களவாடி
வறுமையில்லா
வசந்தத்தை
கொடுத்த காதலனை
நானடையும்
நாளுக்காய்
காத்திருக்கிறேன்
உடலால் மண்ணோடும்
உயிரால் உன்னோடும்
இணைகின்றேன்
உணர்வை கடந்த
நம் காதலின்
முத்தி மரணமாக
நீ என்னை ஆட்கொள்ளும்
போது
முழுமையடைவேனடா!
இயற்கை என் காதலன்
என்று.

■ ■ ■

# புதுமுக மாணவர்களின் மரநடுகை நிகழ்வு





















# புதுமுக மாணவர்களின் ஓவியங்கள்



சி.ஜனுஷிகா
(விவசாயப்பீடம்)





ர.விஜய் (கலைப்பீடம்)



த.தமிழ்வாணி
(கலைப்பீடம்)



ரா.திவாஜினி
(விஞ்ஞான பீடம்)




ப.மிலேனி
(இணைந்த சு.வி பீடம்)



சி.சோபனா
(பல்மருத்துவ பீடம்)



ஜெ.தர்மினி
(கலைப்பீடம்)


ரா.துஷ்யந்தன்
(விஞ்ஞான பீடம்)


வி..அபிஷாயினி
(முகாமைத்துவ பீடம்)



ச.நிலுக்ஷி
(பல்மருத்துவ பீடம்)


சு.ஸ்ருதி
(விவசாயப்பீடம்)


கி.யுரேஷன
(விவசாயப்பீடம்)


சி.ஜனுஷிகா
(விவசாயப்பீடம்)


ப.டிபீஷனன்
(இணைந்த சு.வி பீடம்)


பா.சங்கீர்த்தனன்
(இணைந்த சு.வி பீடம்)

## “பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது”

“காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞானத்தின் மானப்பெரிது” அகிலம் போற்றும் தாய்த் தமிழின் சுகந்தத்தினை உலகறியச் செய்யும் பெரும் முயற்சியில் எம் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கமானது தனித் தன்மையை தன்னகத்தே கொண்டு தனக்கென ஒரு வரலாற்றையும் உருவாக்கிக் கொண்டுள்ளமையானது யாமனைவரும் அறிந்ததொன்றே. அந்த வகையில் தமிழ்ச் சங்கம், தமிழின் மேன்மையை பல்கலை வட்டத்தில் மட்டும் பரப்பாது, தரணி எங்கும் பறைசாற்றுவதற்கும் “தமிழ்” என்பது மொழிகளை கடந்த படைப்பு என்பதை காலங்காலமாக நிரூபித்து வருகின்றது.

அந்த வகையில் “நறுமுகை” என்னும் இந்த மலரத் துடிக்கும் மொட்டுக்களில் எம் இளசுகளின் ஏராளமான கலைப்படைப்புகள், கலையாக்கங்கள் ஒளிந்துக்கொண்டு மணம் வீசக் காத்துக் கிடக்கின்றன. எனவே இந்த சஞ்சிகை மொட்டில் நீங்கள் விரிக்கும் ஒவ்வொரு இதழ்களிலும் வீசும் மணம் உங்கள் மனங்களை ஸ்பரிசம் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அந்த வகையில் இந்த நறுமுகை மொட்டினை வளர்ப்பதற்கு உரமிட்ட பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், கல்விசார் ஊழியர்கள் மற்றும் ஆக்கங்களை தந்துதவிய எம் சகோதர சகோதரிகள் உள்ளிட்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் எம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

இதழாக்க குழு
தமிழ்ச்சங்கம்

